# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச்- 2015
## Term Examination, March - 2015

| தொடர்பாடல் ஊடகக்கற்கை - I | தரம் :- 13 (2015) | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

❖ 01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (i), (ii), (iii), (iv), (v) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து, அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

1) பின்வருவனவற்றுள் தொடர்பாடல் இயல்பாக அமையாதது.
   i) ஒருவழியாகவும், இருவழியாகவும் தொடர்பாடல் செயன்முறை இடம்பெறுதல்
   ii) தொடர்பு சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப தொடர்பாடல் செயன்முறை இடம்பெறும்
   iii) தொடர்பாடல் தடைகள் தொடர்பு செயன்முறையின் வினைத்திறனை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும்
   iv) தனியாள் இயல்புநிலைகட்கு எற்ப தொடர்பாடல் தன்மை வேறுபட்டமையும்
   v) தொடர்பாடல் செயன்முறை நீட்சித் தன்மைக்குட்பட்டது

2) உரையாடல் அற்ற (non-verbal communication) தொடர்பாடல் வடிவத்தின் பிரதான வழி முறையாகக் கொள்ளக்கூடியது.
   i) மொழி   ii) உடல்மொழி   iii) ஓசைகள்   iv) குறியீடுகள்   v) சமிக்ஞைகள்

3) பின்வருவனவற்றுள் அறிவுச்சமூக இயல்பு நிலையை பிரதிபலிக்காத கூற்று
   i) உலகளாவிய விஞ்ஞான, அறிவியல், சமூக முன்னேற்றங்களுக்கு மதிப்பளித்தல்
   ii) உலகளாவிய முன்னேற்றங்களை உள்வாங்க முயற்சித்தல்
   iii) முன்னேற்றங்களை உள்வாங்கி சேமித்து வைத்தல்
   iv) முன்னேற்றகரமான விடயங்களை உள்வாங்கி பரவலடையச் செய்தல்
   v) முன்னேற்றகரமான விடயங்களை உள்வாங்கி பிரயோகிக்கும் தன்மை

4) சொத்துரிமைக்கு எவ்வித வரையறைகளும் கட்டுப்பாடுகளும் விதிக்காமல் தாம் விரும்பியவாறு சொத்துக்களை அனுபவிக்க வாய்ப்பளித்தல் இயல்பு வலியுறுத்தப்படுவது.
   i) சுதந்திரக் கோட்பாட்டில்   ii) சோசலிசக் கோட்பாட்டில்
   iii) பாசிசகோட்பாட்டில்   iv) முதலாளித்துவக் கோட்பாட்டில்
   v) தாரண்மைவாதக் கோட்பாட்டில்

5) - ஜனநாயகத் தன்மை உயர்மட்டத்தில் பேணப்படல்
   - சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்படல்
   - நவீன தொடர்பால் தொழில் நுட்பத்தின் பக்க விளைவு

   மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புபட்டமைந்த ஊடகவியல் போக்கு
   i) மாற்று ஊடகவியல்   ii) வெகுசன ஊடகவியல்   iii) குடிசன ஊடகவியல்
   iv) தனியார் ஊடகவியல்   v) சமூகமட்ட ஊடகவியல்

6) "தொடர்பாடல் செயன்முறை ஒன்றின்போது குறிமுறையாக்குபவர், குறிமுறையவிழ்பவர் தனது அனுபவம், சூழல், பின்னணி, ஆர்வம் அடிப்படையில் குறித்த செய்தியை உள்வாங்கி கொள்வது மற்றும் விளங்கிக் கொள்வது" பின்வருமாறு அழைக்கப்படும்
   i) வழிமாற்றம்   ii) உச்சஸ்தானம்   iii) பின்னூட்டல்   iv) துலங்கல்   v) கடத்துதல்



agaram.lk
Scanned with CamScanner

7) ஊடகக்கற்கை மாணவர்களிடையே ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குமார் :- இலாபநோக்குக்கு முதன்மையளித்து சில ஊடகங்கள் செயற்படுகின்றன

ரவி :- சமூக மாற்றம், அபிவிருத்தியை நோக்காகக் கொண்டும் ஊடகங்கள் தொழிற்படுகின்றன

கமல் :- ஊடக நிறுவனங்களின் அதிகாரத் தன்மையான போக்குகளினால் சில புதிய ஊடகப் போக்குகள் உருவாகியுள்ளன.

கவி :- தேசிய மட்ட விடயங்களுக்கு பெரும்பாலும் முதன்மையளித்தல் போக்கு சில ஊடகங்களில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குமார், ரவி, கமல், கவி ஆகியோரின் மேற்படி கூற்றுக்களில் பிரதிபலிக்கும் ஊடகப் போக்கை முறையே குறிப்பன.

i) பிரதான ஊடகம், குடிசன ஊடகம், சமூக ஊடகம், பிரதான ஊடகம்
ii) பிரதான ஊடகம், மாற்று ஊடகம், மாற்று ஊடகம், பிரதான ஊடகம்
iii) பிரதான ஊடகம், குடிசன ஊடகம், மாற்று ஊடகம், சமூக ஊடகம்
iv) பிரதான ஊடகம், சமூக ஊடகம், குடிசன ஊடகம், பிரதான ஊடகம்
v) பிரதான ஊடகம், மாற்று ஊடகம், குடிசன ஊடகம், குடிசன ஊடகம்

8) முறைசார் தகவல் தொடர்பு நிலையங்களில் குறுக்குத் தொடர்பாடல் வழிமுறையும் உள்ளடங்குகின்றது. பின்வருவனவற்றுள் இதற்கு எடுத்துக்காட்டான சந்தர்ப்பமாக அமைவது

i) நிறுவன முகாமையாளர் சுற்றுநிருபம் ஊடாக ஊழியர்களுக்கு செய்தியையும் அறிவுறுத்தல்களையும் பரிமாற்றுதல்
ii) நிறுவனம் ஒன்றின் பொதுசனத் தொடர்பு அதிகாரியிடம் ஊழியர்கள், மற்றும் மக்கள் தமது அபிப்பிராயங்கள், விசாரணைகளை முன்வைத்தல்
iii) நிறுவனம் ஒன்றின் நிர்வாகப் பிரிவு, செயற்றிட்டப் பிரிவு, கொடுக்கல் வாங்கல் பிரிவு ஆகியவற்றின் பணிப்பாளர்கள் செய்திகளை பரிமாற்றுதல்
iv) நிறுவன முகாமையாளர் ஊழியரின் பிரச்சினைகளை தனிப்பட்ட ரீதியில் உரையாடல் ஊடாக அறிதல்
v) நிறுவனத்தில் கீழ்மட்ட ஊழியர்கள் முகாமையாளருடனான கலந்துரையாடலின் போது தமது கருத்தினை முன்வைத்தலில் ஈடுபடல்

9) உலகமயமாக்கல் செயன்முறையின் விளைவுகள் தொடர்பில் கருத்தரங்கு ஒன்றில் முன்வைக்கப்பட்ட கருத்தாடல் அம்சங்கள் பின்வருமாறு

A - வெகுசன ஊடகங்களின் பன்முக விரிவாக்கங்களும் எண்ணிக்கை அதிகரிப்பும்
B - ஊடக கலாசாரம் மற்றும் சுதேச கலாசாரத்திற்கிடையில் முரண்நிலைகள் உருவாதல்
C - தகவல் தொழில்நுட்ப சமூக எழுச்சி மற்றும் அறிவுச் சமூக விரிவாக்கங்கள்
D - விளம்பரமயம், இலாபமீட்டல் நோக்குகள் வலுப்பெறல்
E - சுயமாக தகவலை வெளியிடவும் பரப்பவும் புதிய ஊடகங்கள் அறிமுகமாகியுள்ளமை

மேற்குறித்தவற்றில் உலகமயமாக்கலின் நேர்மயமான விளைவுகளாக அமையக்கூடியன

i) A, C மற்றும் D
ii) A, C மற்றும் E
iii) B, D மற்றும் E
iv) A, B மற்றும் C
v) C, D மற்றும் E

10) தன்னகத் தொடர்பாடல் (Intrapersonal communication) இயல்பை பிரதிபலிக்காதது.

i) உட்புற, வெளிப்புற கிளர்ச்சிகள் (Stimuli) இத் தொடர்பில் முதன்மை பெறுவதில்லை
ii) உடல், உள்ளம் சார்ந்த உணர்ச்சிகளும், புலனுணர்வும் இத்தொடர்பில் பெரும் பங்கு வகிக்கின்றன.
iii) தன்னகத் தொடர்பாடலில் இடையூறுகள் ஏற்படுகின்றன.
iv) உட்புற, வெளிப்புற கிளர்ச்சிகளுக்கு துலங்கல் வெளிப்படுத்தல்
v) நடுநரம்பு மண்டலம் (Central Nervous system) புறப்பரப்பு நரம்பு மண்டலம் (peripheral nervous system) தகவல் அனுப்புதல் பெறுதலில் ஈடுபடல்

11) ஒரு நபர் தனக்குத் தெரிந்த மற்றும் அறிந்து கொண்ட தகவலை அனைவருக்கும் வெளிப்படுத்துகின்ற மற்றும் பரிமாற்றுகின்ற முறைசாரா தொடர்பாடல் வழிமுறை பின்வருமாறு அழைக்கப்படும்.

i) கொத்தணி முறை
ii) கோட்டச் சங்கிலி முறை
iii) வதந்தி முறை
iv) நிகழ்தகவு சங்கிலி முறை
v) தனிச் சங்கிலி முறை



agaram.lk
Scanned with CamScanner

12) "நான் உனது எண்ணத்தை நிச்சயமாக எதிர்க்கிறேன். ஆனால் நீ அந்த எண்ணத்தில் கொண்டிருப்பதற்கான உரிமைக்காக நான் உண்மையாக முன்வருவேன்" இக் கூற்றில் வெளிப்படுவது

i) ஐக்கியத்தின் தேவை
ii) சகோதரத்தின் பெறுமதி
iii) கருத்து வேறுபாட்டின் முக்கியத்துவம்
iv) ஆழ்பரிவு
v) நியாயமான உரிமை

13) மொழி சுவீகரித்தல் (Aquisition) என்பது

i) மொழியின் தனித்துவமான இயல்புகளை இனங்காணல்
ii) மொழியிலுள்ள பதங்களுக்கு புதிய கருத்துக்களை ஆக்கல்
iii) மொழியைப் பயன்படுத்தவும், கிரகித்தலுக்கும் கற்றுக் கொள்ளல்
iv) சொற்களின் கருத்துக்களுக்கேற்ப மொழியின் பயன்பாடு வேறுபடுதல்
v) விதிமுறைக்கேற்ப ஒழுங்குமுறையில் சரியாக இணங்காணல்

14) X என்னும் கம்பனி ஒன்றினால் உள்ளக சஞ்சிகை (In – House Journal) ஒன்றினை வெளியிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதன் பயன்பாடு பற்றி சபைப் பணியாளர்களிடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அங்கு எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களிடையே உகந்ததல்லாதது எது?

i) கம்பனியின் இலாபத்தையும் சொத்துக்களையும் அதிகரிப்பதற்கு மேற்கொள்ளும் முறைகளை நியாயமான முறையில் மேற்கொள்ள வேண்டும்.
ii) தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு, உற்பத்திதிறன், நலனோம்பல் பற்றிய விடயங்களை விளக்க வேண்டும்
iii) கம்பனியின் நிர்வாக நோக்கு பற்றி தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.
iv) கம்பனியின் உற்பத்திகள் பற்றி மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
v) தொழிலாளர்கள், பங்குதாரர்கள், முகவர்கள், நலன் விரும்பிகள் போன்றவர்களிடையே தகவல்கள் பரிமாற்றப்பட வேண்டும்.

15) பூகோளமயமாக்கலுக்கு முன் நிபந்தனையாக இருக்கக்கூடியது

i) தொழினுட்ப முன்னேற்றத்தின் மறுத்தொழிப்பு ஆகும்.
ii) தேசிய மற்றும் வீட்டு விழுமியங்களுக்கு முக்கியத்துவம் வழங்குதலாகும்.
iii) இனங்களுக்கிடையிலான நெருக்கம்
iv) நாடுகளுக்கு குறுக்கான (Transnational) நிறுவகங்களின் படைப்பாற்றலாகும்
v) வெகுசன ஊடகத்தின் விரிவாக்கம்

agaram.lk

16) "வெகுசன ஊடக செய்தி அறிக்கையிடல்கள் முரண்பாட்டு நிலைமைகளை தோற்றுவிக்கின்றன" இதனடிப்படையில் செய்தி ஒன்றின் செம்மை மற்றும் துல்லியம் தீர்மானிக்கப்படுவது

i) செய்தி நிருபர் ஒருவரின் எழுத்தாற்றலில்
ii) செய்தி நிருபரின் விவேகத்தில்
iii) செய்தி ஆசிரியரின் விவேகத்தில்
iv) செய்தி தெரிவு செய்கின்ற ஆசிரியரின் திறமையில்
v) செய்தி நிருபர் தெரிவு செய்கின்ற தகவல் மூலாதாரங்களில்

17) "ஏழ்மையற்றதும் சொகுசற்றதுமான சமூகமொன்று" என்ற அடிப்படை தூரநோக்கில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுகின்ற நிறுவனம்

i) சுகாதாரப் பணிமனை
ii) சணச வியாபார வேலைத்திட்டம்
iii) சமுர்த்தி அதிகாரசபை
iv) சர்வோதய வியாபாரத் திட்டம்
v) பிரதேச அபிவிருத்திசபை

18) "வளம் சீராக பகிரபடாத போதிலும், இரு குழுக்களிடையே தொடர்பின்மை ஏற்படுகின்ற போதிலும், ஒரு குழு இன்னொரு குழு மீது தவறான எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பங்கள் என முரண்பாட்டிற்கான சூழ்நிலைகள் நீட்சி பெறுகின்றன" பின்வருவனவற்றுள் முரண்பாட்டு உணர்திறன் மிக்க அறிக்கையிடலுக்கான வழிமுறையாக அமையாதது.

i) முரண்பாட்டினை நியாயமானதாகவும் சமநிலை பேணும் வகையில் அறிக்கையிடல்
ii) முரண்பாட்டு பின்னணி காரணங்களை அறிக்கையிடல்
iii) முரண்பாட்டு சூழ்நிலைகளை மன எழுச்சி நிலைக்கட்கு உட்பட்ட வகையில் அறிக்கையிடல்
iv) முரண்பாட்டு தாக்கத்தை அறிந்து கொள்ளும் வகையில் அறிக்கையிடல்
v) முரண்பாட்டு இணக்கப்பாடு தொடர்பிலான முயற்சிகளை அறிக்கையிடல்



Scanned with CamScanner

19) ஊடக மொழி பயன்பாட்டின் பலமாக அமையாதது.
i) பயன்படுத்தப்படும் மொழி சமூகத்தில் எல்லோராலும் விளங்க முடியாதிருத்தல்
ii) சுருக்கமாகவும், ஆக்கபூர்வமாகவும் மொழியை பயன்படுத்த முடியும்
iii) உணர்வுகளை பெறுநர்களிடத்தில் தூண்டமுடியும்
iv) பயனாளிகளின் கவனத்தை ஈர்க்க முடிதல்
v) ஊடக சிறப்பு வகைக்கு ஏற்ப மொழியை பயன்படுத்த முடிதல்

20) "ஞாபகத்தில் பதிவு செய்தல் செயன்முறை மூளையின் ஆற்றலுடன் தொடர்புபட்டதாகும் பின்வருவனவற்றில் இடது மூளையின் ஆற்றல்கள் பற்றி உளவியலாளர்கள் குறிப்பிடும் செயன்முறை தொகுதியாக அமையக்கூடியது.
i) கணித ஆற்றல், வகைப்படுத்தல்
ii) இனங்காணல், தர்க்கம்
iii) வகைப்படுத்தல், விளக்கமளித்தல்
iv) பகுத்தறிவு, ஆக்கத்திறன்
v) விமர்சனம், சிக்கலான கோலம் பற்றி புலக்காட்சி

21) வகுப்பறையில் மாணவர்கள் செய்தி என்ற எண்ணக்கரு தொடர்பாக தெரிவித்த கருத்துக்களுக்கு ஏற்ப
A - பொறித்தொகுதிகளை மட்டும் கொண்டு தீர்மானிக்கப்படும்
B - அந்தரங்கமான இயல்பை கொண்டதல்ல
C - கூட்டு முயற்சியின் வெளியீடாகும்
D - இலாபத்தை நோக்காகக் கொண்டு பெரும்பாலும் அமைந்தது
E - குறித்த ஒரு மக்கள் கூட்டத்திற்கு மாத்திரம் பொருந்துவன செய்தி தொடர்பிலான இயல்பை பிரதிபலிக்கக்கூடியவை

i) A மட்டும் ii) B மட்டும் iii) B யும் C யும் மட்டும்
iv) C யும் E யும் மட்டும் v) A யும் D யும் E யும் மட்டும்

22)
A - வழிகாட்டல் ஆலோசனை
B - எச்சரிக்கை விடுத்தல்
C - பொது உடன்பாட்டை பெறுதல்
D - பிரச்சினை தீர்த்தல்
E - ஞாபகப்படுத்தல்

இவற்றில் குழுத்தொடர்பு, தன்னகத் தொடர்பு இயல்புகளாக அமைவன முறையே
i) Aயும் Cயும் ii) Bயும் Eயும் iii) Cயும் Eயும் iv) Dயும், Eயும் v) Bயும் Dயும்

23) ஊடகக் கழகத்தின் செயற்திட்ட ஒழுங்கமைப்பாளர்களினால் முன்னெடுக்கப்படக்கூடிய ஆக்கச் செயற்திட்டத்திற்கு எடுத்துக்காட்டுக்களாக அமைவன.
i) சுவர்ப்பத்திரிகை வெளியீடு, புகைப்படக்கண்காட்சி
ii) கவிதைஆக்கம், செய்தி எழுதுதல்
iii) மாணவர் கற்றலுக்காக தொலைக்காட்சியை பயன்படுத்துவது தொடர்பான ஆய்வு, பாடசாலை மாணவர்களின் பத்திரிகை வாசிப்பு தொடர்பான ஆய்வு
iv) நல்ல பாடல்களை இரசித்தல், நாடகம் ஒன்றை விமர்சித்தல்
v) சமாதானம் தொடர்பான பாடல் தயாரிப்பு, காட்டூன் கண்காட்சி

24) மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதன் நோக்கமாக அமையாதது
i) நிகழ்ச்சித்திட்ட இலாபங்களை முற்கூட்டியே அறிதல்
ii) மக்கள் தொடர்பு நோக்கங்களை நிச்சயித்தல்
iii) பௌதீக மானிட வளத் தேவையை கணிப்பிடல்
iv) தேவைக்கு ஏற்ப முன்னுரிமைப் பட்டியலை தீர்மானித்தல்
v) நிகழ்ச்சித் திட்டத்தின் பொருத்தப்பாட்டை மதிப்பிடல்


agaram.lk
Scanned with CamScanner

25) சமூகம் - தகவல் எண்ணகருவை பிரதிபலிக்காத கூற்று
i) சமூக நிலைப்பாட்டிற்கு தகவல் அவசியம்.
ii) சமூகத்திற்கு தகவல் கிடைக்கும் வழிகளாக ஊடகங்கள் செயற்படுகின்றன.
iii) முறைசார் ஊடக வழிமூலம் மட்டும் தகவல்கள் சமூகத்துக்கு கிடைக்கப் பெறுகின்றன.
iv) முறைசாரா தகவல்களும் சமூக நிலைப்பாட்டிற்கு அவசியமாகின்றன.
v) வெகுசன ஊடகத்தை விட நவீன ஊடகம் மூலம் துரிதமாக தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன.

26) தொடர்பை துணிபவர் தொடர்பை மற்றவர்களுடன் பகிர்ந்து ஒரு பொதுமைப்பாட்டை உருவாக்குவதற்கு அவர் குறித்த செய்தியை தனக்குள்ளே உள்வாங்கிக் கொள்கின்ற செயன்முறை
i) குறியவிழ்ப்புச் செயன்முறை
ii) வழிமாற்றும் செயன்முறை
iii) குறிமுறையாக்கும் செயன்முறை
iv) உற்பத்தி செயன்முறை
v) ஊடுகடத்தி செயன்முறை

27) பின்வருவனவற்றில் அபிவிருத்தி ஊடகவியலின் இயல்பை பிரதிபலிக்காதது.
i) மக்கள் சிந்தனையிலும் சமூக அமைப்புக்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை.
ii) பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
iii) அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்குமிடையில் தகவல் தொடர்பை உருவாக்கிக் கொடுத்தல்
iv) பிரச்சினைகளில் மேலோட்டமாக கவனம் செலுத்துகின்றது. அதேவேளை சம்பந்தப்பட்ட நபர்களில் அதீத கவனம் செலுத்துகின்றது.
v) மக்கள் பிரச்சினைகள் அவற்றை தீர்ப்பதற்கான செயல்முறைகளை கவனத்தில் கொள்கின்றன.

28) நேர்முகக் கலந்துரையாடல் (Interviews) ஊடாக எட்டப்பட முடியாதது.
i) உடன்படிக்கை உருவாக்கலாம்
ii) கருத்துக்கள் வெளிக்கொணரப்படலாம்
iii) பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம்
iv) மறைந்து காணப்படும் விடயங்கள் வெளிப்படுத்தப்படலாம்
v) தனிப்பட்ட கருத்தியல் மேலாதிக்கம் இடம்பெறலாம்.

agaram.lk

29) பிறரது கவனத்தை பெறுதல், பாராட்டுக்களை பெறுதல் என்பன மாஸ்லோவின் தேவைக்கூம்பில்
i) உடல்சார் தேவைக்குள் உள்ளடக்கப்படும்
ii) அன்புரிமை தேவைக்குள் உள்ளடக்கப்படும்
iii) மதிப்புத் தேவைக்குள் உள்ளடக்கப்படும்
iv) காப்புத் தேவைக்குள் உள்ளடங்கப்படும்
v) பாதுகாப்பு தேவைக்குள் உள்ளடங்கப்படும்

30) "ஊடக கலாசாரம் மக்கள் கலாசாரத்தை பின்தள்ளிவிட்டு முனைப்பு பெற்றுள்ளது" பின்வருவனவற்றுள் கலாசார பரிமாற்ற செயன்முறையின் விளைவு அல்லாதது
i) நாடுகளுக்கிடையில் பரஸ்பரம் ஒத்துழைப்பை உருவாக்கும்
ii) இதன் காரணமாக சமூக அபிவிருத்தி உருவாகும்
iii) இதன் காரணமாக முரண்பாடு உருவாகும்
iv) சமூக சுகவாழ்வு உருவாகும்
v) சமூக முரண் நிலையில் இழிவு நிலையை உருவாக்கும்

31) மாக்ஸ், ஏஞ்சல்சு, லெனின் போன்றோரின் சிந்தனையுடன் தொடர்புடைய தொடர்பாடல் கோட்பாடு
i) சோவியத் பொதுவுடைமை தொடர்பாடல் கோட்பாடு
ii) ஜனநாயக தொடர்பாடல் கோட்பாடு
iii) சமூக பொறுப்பு தொடர்பாடல் கோட்பாடு
iv) அபிவிருத்தி தொடர்பாடல் கோட்பாடு
v) ஆதிக்க தொடர்பாடல் கோட்பாடு



Scanned with CamScanner

32) முரண்பாட்டு முகாமைத்துவம் தொடர்பாக ஒரு தொகுதி மாணவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.

ரது - முரண்பாட்டை நேர்முறையில் (Positive) அணுகுதல்
குமார் - முரண்பாட்டை உடன்பாடான நிலைக்கு இட்டுச்செல்லல்
பாலன் - முரண்பாட்டை மறுத்தலுக்கு உட்படுத்தல்
கஜன் - முரண்பாட்டு சூழல்நிலையை ஆக்கபூர்வ நிலைக்கு நகர்த்துதல்
மாதவன் - முரண்பாட்டினை பயங்கரநிலை, அழிவு மட்டம் நோக்கி நகர்த்துதல்

மேற்படி கூற்றுகளில் முரண்பாட்டு முகாமைத்துவ எண்ணக்கரு தொடர்பில் சரியான இயல்பு நிலைகளை வெளியிட்டவர்

i) ரது மற்றும் பாலன்
ii) ரது, பாலன் மற்றும் கஜன்
iii) ரது, குமார் மற்றும் கஜன்
iv) குமார், பாலன் மற்றும் மாதவன்
v) குமார், பாலன், கஜன் மற்றும் மாதவன்

33) அபிவிருத்தி தொடர்பாடல் செயன்முறையில் செயற்றிட்ட பிரேரணை தயாரிப்பில் உள்ளடக்கப்பட முடியாத கூறாக அமைவது

i) தகவல் திரட்டலும், முன்மொழிதலும்
ii) இலக்கும், நோக்கும்
iii) முறைமையும், உத்திகளும்
iv) வளப் பயன்பாடும், வரவு செலவும்
v) எல்லையும், வரையறைகளும்

34) கற்றல் தொடர்பான தோண்டைக்கின் தூண்டி துலங்கல் கொள்கையின் அடிப்படையில் குறித்த ஒரு செயல் அல்லது பிணைப்பை மீண்டும் மீண்டும் செயன்முறைப்படுத்துவதன் ஊடாக வலுப்படுத்தப்படுகின்ற செயன்முறை இடம்பெறுவதாக குறிப்பிடுகின்ற விதி பின்வருமாறு அழைக்கப்படுகிறது.

i) ஆயத்த விதி
ii) பயிற்சி விதி
iii) விளைவு விதி
iv) பரிசோதனை விதி
v) நிபந்தனைப்படுத்தல் விதி

35) அச்சு ஊடகமூலமான திறன் விருத்தியை நெருக்கமாக பிரதிபலிப்பது

i) சொற்களஞ்சியதிறன், பேச்சுத்திறன், கற்பனைத்திறன்
ii) கற்பனைத்திறன், வாசிப்புத்திறன், சொற்களஞ்சியத்திறன்
iii) மனஒருமைப்பாடு, வாசிப்புதிறன், சொற்களஞ்சியதிறன்
iv) அழகியல் உணர்வு, காட்சித்திறன், செவிமடுத்தல் திறன்
v) காட்சித்திறன், வாசிப்புத்திறன், இரசனைத்திறன்

agaram.lk

36) வன்முறை கவர்ச்சி எண்ணக்கரு (The violent is attractive) தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - வன்முறை நிகழ்ச்சிகள் மனிதனை கவரக்கூடியது.
B - ஊடக இலாபநோக்கிற்கு வன்முறை கவர்ச்சி முக்கிய பங்கு வகிக்கிறது.
C - பத்திரிகையில் குற்றங்கள், விபத்துக்கள் முதற்பக்கத்தில் உள்ளடங்கப்படுவது வன்முறை கவர்ச்சியின் அடிப்படையிலாகும்
D - வன்முறை நிகழ்ச்சிகள் ஊடாக ஊடகங்கள் சமூக நோக்கை அடைகின்றன.

மேற்படி கூற்றுக்களில் வன்முறை கவர்ச்சி செயன்முறையுடன் நெருக்கமானவை

i) Aயும் Cயும
ii) B யும் Cயும்
iii) Aயும் Dயும்
iv) Aயும் Bயும் Cயும்
v) A,B,C,D ஆகியன எல்லாம்

37) சமூக வானொலி ஒலிபரப்பில் பயன்படுத்தப்படுகின்ற மொழிப் பயன்பாட்டின் இயல்பு நிலையில் அவதானிக்கப்பட முடியாதது

i) பிரதேச மொழியை பயன்படுத்தல்
ii) மக்களை கவர்வதை இலக்காக கொண்டு பயன்படுத்தல்
iii) பேச்சு மொழியை பயன்படுத்தல்
iv) நியம மொழியை பயன்படுத்தல்
v) கிளைமொழியை பயன்படுத்தல்



Scanned with CamScanner

38) உளச் செயற்பாட்டின் கட்டமைப்பை தந்தவர்
i) மாஸ்லோ ii) சிக்மன் ப்ரொய்ட் iii) ஜொஹன்கெல் iv) எட்வேட்சபீர் v) பியாசே

39) நிறுவனச் செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற முரண்பாடு பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.
i) கட்டமைப்பு முரண்பாடு
ii) மூலத்துவ முரண்பாடு
iii) தகவல் முரணபாடு
iv) தேவை முரண்பாடு
v) தவறான நடத்தை முரண்பாடு

40) பிராந்திய மட்டத்தில் வானொலி, தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்படுவதன் முதன்மை நோக்கமாக அமையக்கூடியது.
i) பிராந்தியமக்களை அபிவிருத்தி செயற்பாட்டில் பங்கேற்க செய்தல்
ii) பிராந்திய மட்டத்தில் வியாபார நோக்கத்தை விரிவாக்குதல்
iii) பிராந்திய மட்டத்தில் ஊடக செயற்பாட்டின் வீச்சை பரவலாக்குதல்
iv) பிரந்திய மட்டத்தில் வெகுசன ஊடக கலாசாரத்தை விரிவாக்குதல்
v) பிராந்திய மட்டத்தில் ஒலி, ஒளிபரப்பு தரத்தை மேம்படுத்தல்

41) வானொலி நேர்காணல் சந்தர்ப்பம் ஒன்றில் நேர்காண்பவர் கவனத்தில் கொள்ள வேண்டிய இயல்பாக அமைய முடியாதது.
i) நேர்காணல் மையப்பொருள்
ii) நேரமுகாமை பேணுதல்
iii) நேர்காண்பவரின் அந்தரங்க விடயங்கள் மற்றும் தனிப்பட்ட விடயங்கள்
iv) வினாக்கள் தொடர்பான வரையறைகள்
v) நேர்காணல் மேற்கொள்ளப்படவுள்ள இடஅமைவின் பொருத்தப்பாடு

42) வெகுசன ஊடக விளம்பரங்கள் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன
A - பண்புசார் பார்வை நோக்கை உருவாக்கல்
B - மக்களின் சிந்தனையை மாற்றியமைத்தல்
C - சமூகத்துடன் தொடர்பை கட்டியெழுப்புதல்
D - நன்மதிப்பையும், நலசேவையையும் கட்டியெழுப்புதல்
மேற்குறித்த கூற்றுக்களில்
i) A மட்டும் சரியானது
ii) Aயும் Bயும் மட்டும் சரியானது
iii) Bயும் Cயும் மட்டும் சரியானது
iv) Aயும் Cயும் Dயும் மட்டும் சரியானது
v) A, B, C, D ஆகியன அனைத்தும் சரியானது

agaram.lk

43) குறித்த சமூகத்திற்கு பொருத்தமான அமைப்பொழுங்கையும், நடத்தையையும், ஒத்த தன்மையிலான வாழ்க்கை முறையையும் ஏற்படுத்தும் நோக்கிலான வெகுசன ஊடகநோக்காகவும், பணியாகவும் அமைவது
i) தகவல் வழங்குதல்
ii) சமூகமயமாக்குதல்
iii) பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குதல்
iv) தூண்டலை ஏற்படுத்தல்
v) விழிப்புணர்வை ஏற்படுத்தல்

44) அச்சு இலத்திரனியல் ஊடக வலிமைகள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.
A - காப்பு
B - கணநிலையானது
C - விபரணம்
D - சுருக்கம்
E - கொண்டு செல்லல் இலகு
மேற்படி கூற்றுக்களில் அச்சு ஊடக வலிமைகளாக கொள்ளக்கூடியன
i) Aயும் Cயும் Dயும்
ii) Aயும் Cயும் Eயும்
iii) Bயும் Dயும் Eயும்
iv) Aயும் Bயும் Eயும்
v) Cயும் Dயும் Eயும்



Scanned with CamScanner

45) "செய்தியின் மூலத்தை சிலர் விளங்கிக் கொள்வர். சிலர் விளங்கிக் கொள்ளமாட்டார்கள். சிலர் செய்திகளை நேரடியாகப் பெறுவர். சிலர் நேரடியாகப் பெறமாட்டார்கள் செய்திகள் குறித்த இடத்தில், குறித்த கருவி வழியாகத்தான் பரப்பப்பட வேண்டு என்ற கட்டாயத் தன்மை காணப்படாது"
மேற்படி இயல்புகளுடன் தொடர்புடைய மாதிரி

i) பலபடி போக்கு மாதிரி
ii) இருபடி போக்கு மாதிரி
iii) ஒருபடி போக்கு மாதிரி
iv) மருத்துவ ஊசி மாதிரி
v) அரிஸ்ரோட்டில் மாதிரி

46) வெகுசன ஊடகச் செயற்பாட்டில் வாயில் காப்பு செயன்முறையாளராக கொள்ள முடியாதவர்

i) செய்தியாளர்
ii) செம்மைப்படுத்துநர்
iii) ஒப்புநோக்குநர்
iv) ஊடக உரிமையாளர்
v) செய்தி ஆசிரியர்

47) தெளிவான காரணம் இன்றிய நிலையில் ஒருவர் ஒருவித கவலைக்குட்படுதல் அல்லது எதிர்பார்ப்பு நிறைவோறாத சூழ்நிலையில் உருவாகக் கூடிய மன அழுத்தம்

i) தடுமாற்றம்
ii) வைராக்கியம்
iii) பதட்டம்
iv) கோபம்
v) சஞ்சலம் அல்லது சலனம்

48) சமூகத் தொடர்பாடல் வலுவுள்ளதாக அமைவதற்கு உதவக்கூடியது

i) ஆழ்பரிவு (Empathy)
ii) சுயஎண்ணகரு (Self concept)
iii) பரப்புரை (Propaganda)
iv) கருத்தியல் (Ideology)
v) மாறா எணக்கரு (Stereo type)

49) சமகாலத்தில் ஊடக வன்முறை முரண்பாட்டு அறிக்கையிடல்களை கட்டுப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான வழிமுறையாக அமையக்கூடியது

i) சட்ட வரையறைகளை அமுல்படுத்தல்
ii) ஒழுக்க நெறிக் கோட்பாட்டை அமுலாக்குதல்
iii) ஊடக வழக்காறுகளை அமுலாக்குதல்
iv) சுய ஊடக ஒழுக்க கோவையை அமுலாக்குதல்
v) ஊடக மரபுகளை அமுலாக்குதல்

50) "எழுத்துமூலமான இதழ்வழிச் செய்தியானது பார்வையை மட்டும் ஈர்த்த செய்தியை புரிய வைக்கும். ஆனால் ஏனைய ஒலி, ஒளி சாதனங்கள் கண் செவிப்புலன்களை ஈர்த்து செய்தியை புரியவைக்கின்றன எனவே செய்தி சொல்லும் வழி எதுவாக இருந்தாலும் அவ்வூடகத்தை தெரிவு செய்பவருக்கு பொருந்தும் வகையில் அமைய வேண்டும்" என ஊடகம் (Channel) பற்றிய முக்கியத்தவத்தை எடுத்துக் கூறியவர்

i) மார்ஸல் மெக்லூகன்
ii) எட்வேட்சபிர்
iii) பெர்லோ
iv) லாஸ்வெல்
v) டென்னிஸ்மக்குவில்

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச்- 2015
## Term Examination, March - 2015

| தொடர்பாடல் ஊடகக்கற்கை - II | தரம் :- 13 (2015) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
❖ ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

1) "ஊடகத்தினால் சொல்சார், கட்புல, எழுத்துமூல, ஒலி மூல, சொல்சாரா வடிவங்களில் வன்முறைகள் வெளிப்படுத்தப்படுகின்றன"

I) வெகுசன ஊடகங்களில் வன்முறை வெளிப்படுத்தப்படுவதற்கு நான்கு எடுத்துக்காட்டுகளை எடுத்துரைக்குக.

II) வெகுசன ஊடகங்கள் வன்முறைக்கு முதன்மையளிப்பதால் ஊடக நிறுவனங்களுக்குக் கிடைக்கக் கூடிய இரு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

III) ஊடக வன்முறையினால் சமூகம் மற்றும் வீட்டில் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

IV) ஊடக வன்முறையில் இருந்த சமூகத்தைப் பாதுகாக்க முன்னெடுக்கக்கூடிய வழிமுறைகளை பின்வரும் மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

அ) ஊடகவியலாளர் மற்றும் ஊடக நிறுவனம்
ஆ) ஊடகக் கழகங்கள்
இ) பாடசாலை கலைத்திட்டம் (ஊடக பாடநெறி)
ஈ) ஊடக விமர்சகர்

2) "அபிவிருத்தி தொடர்பாடல் கருத்திட்டம் அபிவிருத்தி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவும், தீர்மானம் எடுப்பதற்கும் அவசியமானது"

I) பாடசாலை ஒன்றில் முன்னெடுக்கக்கூடிய அபிவிருத்திக்கான தொடர்பாடல் கருத்திட்டத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பெயரிடுக.

II) கருத்திட்டத்திற்கான தகவலை சேகரிப்பதற்கான விஞ்ஞான ரீதியான முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

III) அபிவிருத்திக்கான கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

IV) கருத்திட்டம் நிறைவடைந்த பின்னர் இறுதி அறிக்கை தயாரிப்பதன் மூலம் கிடைக்கக் கூடிய அனுகூலங்களை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

3) "இன்றைய இளைஞர்களின் ஜனரஞ்சக நடத்தை கோலங்களை உருவாக்குவதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன"

I) சமூக நடத்தை கோலத்தை தீர்மானிக்கும் காரணிகள் நான்கைப் பெயரிடுக.

II) மரபுரீதியான சமூகத்தில் கலாசார ஆக்கிரமிப்பினால் ஏற்பட்டுள்ள அதிர்வுகள் இரண்டினை எடுத்துரைக்க.

III) ஊடக விளம்பரம் முக்கியம் பெறும் தன்மையினை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

IV) சமூக ஒருமைப்பாட்டுக்கு கலாசார பரிமாற்றம் உதவும் வழிமுறைகளை நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.



agaram.lk
Scanned with CamScanner

4) "ஒரு அமைப்புக்கும் அதனுடன் தொடர்புபட்டமைந்த மக்களுக்கும் இடையில் இடைத்தொடர்பு மற்றும் நன்மதிப்பு ஏற்படுத்துவதற்கான முயற்சி பொதுசனத் தொடர்பாகும்"

I) வர்த்தக நிறுவனம் ஒன்று நன்மதிப்பையும், புரிந்துணர்வையும் உயர்த்துவதற்காக நிதிமானியங்களை வழங்குவது எவ்வாறு அழைக்கப்படும்?

II) அரசாங்கத்திற்கும் - பொதுமக்களுக்கும் இடைத்தொடர்பை உருவாக்கவும், அரசபணிகள் தொடர்பினாலான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் செயற்படுகின்ற திணைக்களம், நபர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?

III) பொலிஸ் நிறுவனம் முன்னெடுக்கக்கூடிய மக்கள் தொடர்பு திட்டங்களை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

IV) ஊடக கலந்துரையாடல் (Media conference) ஒன்றினை திட்டமிடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு காரணிகளை விபரிக்குக.

5) "முரண்பாடுகள் தடைகளை ஏற்படுத்துவதுடன், புதிய உத்வேகத்தையும் வழங்குகின்றது"

I) கெல்டுங் அவர்களினால் முன்வைக்கப்பட்ட முரண்பாட்டு முக்கோணியில் உள்ளடங்குகின்ற கூறுகளைப் பெயரிடுக.

II) முரண்பாட்டு தீர்வுக்கு வெற்றி வெற்றி மாதிரி பயன்படுத்தப்படுவதனால் கிடைக்கக்கூடிய நேர்த்தன்மையான பாதிப்பக்கள் இரண்டினை குறிப்பிடுக.

III) "வீட்டு சமாதானம், சகவாழ்வுக்கு தொடர்பாடல் கலாசாரம் முக்கியமானது" ஆரோக்கியமான வீட்டு தொடர்பாடல் கலாசாரத்தின் குணாம்சங்களை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

IV) சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வு முறிவடைவதால் ஏற்படக்கூடிய எதிர்மயமான பாதிப்புக்களை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

6) "குழுக்கள் முறைசார்ந்தவகையிலும் முறைசார வகையிலும் இயங்குகின்றன"

I) குழுக்களிடையே வேறுபாடுகள் நிலவுவதற்கான நான்கு காரணிகளை இனங்கண்டு பெயரிடுக.

II) கூட்டுத் தொடர்பாடலுக்கு சூழல் மற்றும் ஆக்கரீதியான ஊடக உபகணங்களை பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய இரண்டு அனுகூலங்களை எடுத்துரைக்குக.

III) கூட்டுத்தொடர்பின் போது பயன்படுத்தப்படுகின்ற மொழியின் பயன்பாட்டை (பேதத்தை) அடையாளப் படுத்தி, அதில் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களை நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

IV) கூட்டு தொடர்பின் வினைத்திறனுக்கும் விளைதிறனுக்கும் செவிமடுத்தல் ஆற்றல் அவசிமானது" செவிமடுத்தல் ஆற்றலை விருத்திசெய்தவற்கான நான்கு வழிமுறைகளை தனித்தனியாக விபரிக்குக.

7) "தொடர்பாடல் மற்றும் ஊடகங்கள் சமூக மாற்றத்திற்கான முகவர்கள்"

I) டி. லாஸ்வெல் சுட்டிகாட்டும் மக்கள் தொடர்பு ஊடகங்களின் பணிகள் மூன்றினை எடுத்துரைக்க.

II) தொடர்பாடல் செயன்முறையில் ஏற்படுகின்ற இடையூறுகளை இழிவளவாக்குவதற்கு கையாளக் கூடிய வழிமுறைகள் நான்கினை பிரேரிக்குக.

III) கிரேப்வைன் (Grapeving) என அழைக்கப்படும் முறைசாரா தொடர்பாடல் இடம்பெறும் நான்கு வழிமுறைகளையும் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

IV) மாற்று ஊடகம் சமூக அபிவிருத்திக்கு உதவும் வழிமுறையை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.



agaram.lk
Scanned with CamScanner